இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 26-11-2024

# அம்பேத்கர், அண்ணா நோக்கில் அரசியலமைப்பு!

**75** ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது இந்திய அரசியலமைப்புச் சட்டம்!

1949 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையால் அரசமைப்புச் சட்டம் ஏற்கப்பட்டது. 1950 ஜனவரி 26 ஆம் நாள் அரசமைப்புச் சட்டமானது நடைமுறைக்கு வந்தது.

நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் இன்றைய தினம் (நவம்பர் 26) சிறப்புக் கூட்டம் நடைபெற இருக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 75 ஆவது ஆண்டைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். **“மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பை உள்ளடக்கி இந்தியாவை வளமான பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஒரு உன்னத உருவாக்கம்தான் அண்ணல் அம்பேத்கர் வடிவமைத்துத் தந்த அரசமைப்புச் சட்டம்”** என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை போற்றுவதும் காப்பதும் இந்திய நாட்டு மக்களின் அடிப்படைக் கடமையாகும். இன்றைக்கு இந்தக் காலச் சூழலில் இது மிகமிக முக்கியமானது ஆகும்.

“400 இடங்களில் வெற்றி பெற வேண்டும் என்று பிரதமர் மோடி ஏன் சொல்கிறார் என்றால், அரசியலமைப்பு சட்டத்தை நாம் மாற்றி அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான்” என்று பா.ஜ.க. எம்.பி.யும் முன்னாள் அமைச்சருமான அனந்த குமார் சொன்னார்.

‘இந்திய அரசியலமைப்புச் சட்டம் முழுமை பெறாத ஆவணம்” என்று தமிழ்நாட்டு ஆளுநர் ரவியும் அவ்வப்போது சொல்லிக் கொண்டு இருக்கிறார். ‘அன்னியக் கண்ணோட்டத்துடன் அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்டுள்ளது’ என்று அன்றைய ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் சொன்னார்கள். அவர்களது வாரிசுகள்தான் இன்று ஒன்றியத்தை ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகையவர்களின் கையில் அதிகாரம் போய் விட்ட காலத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்பது என்பது இந்திய மக்களின் மிகமுக்கியக் கடமை ஆகும். அந்தளவுக்கு பெரும் பெரும்பான்மை அதிகாரம் பா.ஜ.க.வுக்கு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய மக்கள் வழங்கவில்லை. அந்த வகையில் அரசியலமைப்புச் சட்டத்தை மக்களே காப்பாற்றி இருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய அடிப்படை உரிமைகளைக் காக்க வேண்டும். இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கிறது என்ற உண்மையை ஒப்புக் கொண்டு ஒன்றிய ஆட்சியாளர்கள் செயல்பட வேண்டும். அதுதான் அரசியலமைப்புச் சட்டத்தை காக்கும் வழியாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்... **“அரசின் இறைமை என்பது பொதுமக்களிடம் தான் நிலைத்துள்ளது என அரசியலமைப்பின் முகவுரை கூறுகிறது. சட்டம் சார்ந்த இறைமையானது கூட்டாட்சி ஒன்றியத்துக்கும் அதன் அங்கங்களான மாநிலங்களுக்கும் இடையே பிரித்துத் தரப்பட்டுள்ளது. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் ஒற்றையாட்சி அமைப்பு கூடாது; கூட்டாட்சி அமைப்பு முறை தான் வேண்டும் என்று சொன்னார்கள். இது ஒரு துணைக்கண்டம் என்று அழைக்கக் கூடிய அளவுக்கு பரந்து விரிந்துள்ளது. ஆனால் சுங்கத் தொகை வசூலிக்கும் நகராட்சி மன்றங்களைப் போல மாநிலங்களை மாற்றி வருகிறீர்கள்”** என்று 1963 சனவரி 25 அன்று மாநிலங்களவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றினார்கள். இன்றைக்கும் மாநிலங்களை அப்படித்தான் மனரீதியாக வைத்திருக்கிறது ஒன்றிய ஆட்சி.

எனவே தான், ‘மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற சட்ட முன்னெடுப்புகளைச் செய்வோம்’ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது முப்பெரும் விழா உரையில் குறிப்பிட்டார். மக்களுக்கு நேரடியாக நெருக்கமான - மக்களுக்கான அனைத்து சேவைகளையும் செய்து தரக் கூடிய மாநிலங்களை வேதனையில் தள்ளிவிட்டு இந்தியாவைக் காக்க முடியாது.

இந்திய அரசியலமைப்பு சட்ட அவையில் அண்ணல் அம்பேத்கர் ஆற்றிய இறுதி உரை மிகமிக முக்கியமானது. **“1950 ஜனவரி 26 ஆம் நாள் நாம் முரண்பாடுகள் நிறைந்த வாழ்க்கைக்குள் நுழைய இருக்கிறோம். அரசியலில் நாம் சமத்துவத்தைப் பெற்றிருப்போம். சமூகப் பொருளாதார வாழ்வில் ஏற்றத்தாழ்வைப் பெற்றிருப்போம். அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒவ்வொரு வாக்குக்கும் ஒவ்வொரு மதிப்பு என்றிருக்கும். நமது சமூக பொருளாதார வாழ்விலோ ‘ஒரு மனிதன் ஒரு மதிப்பு’ என்ற கோட்பாட்டை தொடர்ந்து நிராகரிப்பவர்களாக இருப்போம். எவ்வளவு காலத்துக்கு இந்த முரண்பட்ட வாழ்வை வாழப் போகிறோம்?”** என்று கேட்டார் அண்ணல்.

சமூக, பொருளாதாரத்தில் மட்டுமல்ல அரசியலிலும் ‘ஒரு மனிதன் ஒரு மதிப்பு’ கோட்பாடு இன்னமும் வரவில்லை, வர விடமாட்டார்கள் என்பதையே இன்று பலரது நடவடிக்கைகளும் காட்டிக் கொண்டிருக்கிறது. “இந்த அவை தமக்கு அளிக்கப்பட்டுள்ள இறையாண்மை மிக்க அதிகாரத்தை அறிவார்ந்த முறையில் பயன்படுத்தும் என்பதை நாம் நமது நடத்தையின் மூலம் நிரூபிப்போம்” என்றார் அண்ணல் அம்பேத்கர். அப்படி நிரூபிக்கும் கடமை இந்திய நாட்டின் அனைத்து மக்களுக்கும் உள்ளது.

அதனைச் செயல்படுத்த உறுதி ஏற்போம்!

**மாநில சுயாட்சி - சமூகநீதி - சமத்துவம் - சமதர்மம் - சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளைக் காப்பதன் மூலமாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் காப்போம் என்பது தான் அண்ணல் அம்பேத்கரும், பேரறிஞர் அண்ணாவும் நமக்குச் சொன்ன அரசியல் அறநெறிகள் ஆகும்.**

●●

### கழகத்தினர் - இளைஞர் அணியினர் - பொதுமக்கள் அனைவரும் நாளை ‘குறிஞ்சி’ முகாம் அலுவலகத்தில் கூடி

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை வாழ்த்தி மகிழ்வோம்!

## பிறந்த நாளையொட்டி கழக இளைஞர் அணி அறிக்கை!

சென்னை, நவ. 26 -

**“கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை நாளை ‘குறிஞ்சி’ முகாம் இல்லத்தில் கூடி 48-ஆவது பிறந்தநாளில் வாழ்த்தி மகிழ்வோம்” என்று கழக இளைஞர் அணி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளது.**



கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது 48வது பிறந்தநாளை முன்னிட்டு, `குறிஞ்சி’ இல்லத்தில் தொண்டர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார் என்று கழக இளைஞர் அணி அறிவிப்பு விடுத்துள்ளது.

திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்தநாள் விழா வருகின்ற நவம்பர் 27 அன்று தமிழ்நாடு முழுவதும் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.

முதலமைச்சர் அவர்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கும் துணையாக, துணை முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு, வரும் பிறந்தநாள் என்பதால், தொண்டர்களும் இளைஞர் அணியினரும் நலத்திட்ட உதவிகள் முதல் இரத்த தான முகாம்கள் வரை பல்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் இளைஞர் அணிச் செயலாளரின் பிறந்த நாளை உற்சாகமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

**வலுவாகக் கட்டமைத்து வழிநடத்தி வருகிறார்!**

2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, கழகத்தினரின் வேண்டுகோளின்படியும் தலைமைக் கழகத்தின் முடிவின்படியும் கழகத் தலைவர் அவர்களின் நம்பிக்கையைப் பெற்று, அதே ஆண்டு ஜூலை 4 அன்று மாநில இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றார், நம் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வகித்த பொறுப்பு என்பதை மனதிலேந்திப் பணியைத் தொடங்கிய அவர், இளைஞர் அணியை ஆற்றல் குன்றாமல் கழகத்தின் பாசறையாக வலுவாகக் கட்டமைத்து வழிநடத்தி வருகிறார்.

25 லட்சம் புதிய இளைஞர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தது, இளைஞர் அணி உறுப்பினர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்தியது, அரசியலுக்கு அப்பாற்பட்டு, கைவிடப்பட்ட நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிகளை முன்னின்று நடத்தியது; குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிரான போராட்டம்; நீட் தேர்வை ஒழிக்க கையெழுத்து இயக்கம், இந்தித் திணிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம் என களத்திலும் தொய்வின்றிச் செயலாற்றி வருகிறது இளைஞர் அணி.

குறிப்பாக, 2007இல் இன்றைய கழகத்தலைவரால் நெல்லையில் நடைபெற்ற இளைஞர் அணியின் முதல் மாநில மாநாட்டின் தொடர்ச்சியாக, 2024இல் சேலத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டை சேலத்தில் எழுச்சியுடன் நடத்திக் காட்டினார் .

இளைஞர்களுக்கு கழகக் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கும் வகையில், தொகுதிதோறும் திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டம், வாசிப்பை விரிவுபடுத்த சட்டமன்றத் தொகுதிகள் தோறும் `கலைஞர் நூலகம்’, `முரசொலி பாசறைப் பக்கம்’, `முத்தமிழறிஞர் பதிப்பகம்’ என்று ஏராளமான பணிகளை முன்னெடுத்திருக்கிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

**182 பேச்சாளர்கள் தேர்வாக வழி வகுத்தார்!**

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் இட்ட ஆணையை ஏற்று கழகத்திற்கு 182 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து கொடுத்தது மட்டுமல்லாமல் அந்த 182 பேச்சாளர்களும் கழகக் கொள்கைகளைத் திசைகள்தோறும் மக்களிடம் கொண்டுசெல்லும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வாரியாக திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை நடத்துவது, 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் தலைமையிலான கூட்டணி 200 தொகுதிகளுக்கு மேல் வெல்வதற்கு மேற்கொள்ள வேண்டிய ஆக்கப்பூர்வ செயல்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு ஆயத்தமாகிக் கொண்டு வருகிறது கழக இளைஞர் அணி.

ஒரு புறம் இளைஞர் அணி பணிகள் என்றால், இதற்கு கொஞ்சமும் சளைக்காமல் துணை முதலமைச்சராக மிகச்சிறப்பாக செயலாற்றி வருகிறார், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.

**குறிஞ்சி இல்லத்தில் தொண்டர்களுடன் சந்திப்பு!**

திராவிட மாடல் அரசில் துணை முதலமைச்சராகப் பணிகளைத் தொடங்கிய பிறகு. தொடர் ஆய்வுகள், பல்வேறு புதிய திட்டங்கள், மழை வெள்ள நிவாரணப் பணிகள் என அரசு சார்ந்த பணிகளையும் ஓய்வில்லாமல் கவனித்து வருகிறார் கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள்.



இந்நிலையில் எளியவர்களின் எழுச்சியையே தனது எழுச்சியாகக் கருதி நாளும் உழைத்து வரும் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய பிறந்தநாளான 27ஆம் தேதி தனது `குறிஞ்சி’ இல்லத்தில் தொண்டர்களைச் சந்திக்கவுள்ளார்.

உரிய பாதுகாப்பு வசதிகளுடன் காலை 9.30 மணிக்குத் தொடங்கும் வாழ்த்துப்பெறும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த. வேலு தலைமையில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு குன்றாமல், இந்நிகழ்வில் தொண்டர்கள் அனைவரும் பங்கேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளருக்கு உங்கள் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவிக்கலாம்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கும் கழகத் தொண்டர்கள், இளைஞர் அணியினர், பொதுமக்கள் அனைவரும் வரும் 27ஆம் தேதி `குறிஞ்சி முகாம்’ அலுவலகத்தில் கூடி, கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் 48வது பிறந்தநாளில் வாழ்த்தி மகிழ்வோம்.

இவ்வாறு கழக இளைஞர் அணி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரூ.23.93 கோடியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்! கடலூர் மாவட்டத்தில்

# பல்வேறு அரசு துறைகள் சார்பில் 12,100 பேருக்கு நலஉதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

கடலூர், நவ. 26 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2024) கடலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.23.93 கோடி மதிப்பீட்டில் மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை அலுவலகம், விருத்தாசலம் உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் மேல் புவனகிரி, கம்மாபுரம், விருத்தாசலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகியவற்றிற்கு புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 12,100 பயனாளிகளுக்கு, 80 கோடி ரூபாய் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று (25.11.2024) நடைபெற்ற விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் 1,001 பயனாளிகளுக்கு ரூபாய் 80,00,000/ மதிப்பிலும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை சார்பில் 16 பயனாளிகளுக்கு, ரூபாய் 74,98,550/ மதிப்பிலும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 9,285 பயனாளிகளுக்கு, ரூபாய் 71,24,00,000/ மதிப்பிலும், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு, ரூபாய் 40,000/ மதிப்பிலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத் தறை சார்பில் 55 பயனாளிகளுக்கு, ரூபாய் 36,32,310/ மதிப்பிலும், தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் 40 பயனாளிகளுக்கு ரூ.42,50,380/ மதிப்பி லும், வேளாண்மை பொறியியல் துறை சார்பில் 16 பயனாளிகளுக்கு, ரூ.61,37,950/ மதிப்பிலும், கூட்டுறவுத் துறை சார்பில் 600, பயனாளிகளுக்கு, ரூபாய் 5,00,00,000/ மதிப்பிலும், கால்நடை பராமரிப்பு துறை சார்பில் 1,000 பயனாளிகளுக்கு, ரூபாய் 16.00.000/ மதிப்பிலும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை சார்பில் 11 பயனாளிகளுக்கு, ரூபாய் 44,66,210/ மதிப்பிலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு, ரூபாய் 71,620/மதிப்பிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் 6 பயனாளிகளுக்கு, ரூபாய் 33,800/ மதிப்பிலும், தாட்கோ சார்பில் 6 பயனாளிகளுக்கு, ரூபாய் 13,60,180/மதிப்பிலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 50 பயனாளிகளுக்கு ரூபாய் 5,09,000/ மதிப்பிலும், என மொத்தம், 12,100 பயனாளிகளுக்கு, ரூபாய் 80,00,00,000/ மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், சபா.இராஜேந்திரன், எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், ம.சிந்தனைசெல்வன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மேயர் திருமதி சுந்தரி ராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, துணை மேயர் பா.தாமரைச் செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.11.2024) கடலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன்விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், பல்வேறு அரசு துறைகளின் சார்பில் 12,100 பயனாளிகளுக்கு, 80 கோடி ரூபாய் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், சபா.இராஜேந்திரன், எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், ம.சிந்தனைச்செல்வன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் க.திருமாறன், துணை மேயர் பா.தாமரைச்செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.